**அனுராதபுரம் பல்கலைக்கழகக் கல்லூரி – 2015**

---

தொழில்சார் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்துடன் இணைந்த அனுராதபுரம் பல்கலைக்கழகக் கல்லூரியின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்தினத்தில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2008 இன் 31 ஆம் இலக்க தொழில்சார் தொழில்நுட்ப பல்கலைக்கழக அதிகாரச்சட்டத்தின் 47(2) ஆம் பிரிவு மற்றும் 2014 ஒக்தோபர் 03 ஆந் திகதிய 1882/51 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தலின் 17(2) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 49(1) ஆம் பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகக் கல்லூரியின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கல்லூரியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கல்லூரியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காகவல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்தச் சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 ஸ்தாபித்தல்**

2008 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்கத் தொழில்சார் தொழில்நுட்பப் பல்கலைக்கழக அதிகாரச்சட்டத்தின் 5(உ) பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 20 ஆம் பிரிவினது (1) ஆம் உப பிரிவின் கீழ் 2014 ஒக்தோபர் 1 ஆந் திகதி முதல் அமுலுக்கு வரும் பொருட்டு தொழில்சார் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தின் நிர்வாக சபையால் தயாரிக்கப்பட்ட 2014 இன் 1 ஆம் இலக்க தொழில்சார் தொழில்நுட்பப் பல்கலைக்கழகக் கல்லூரிச் சட்டவாக்கத்தின் கீழ் அதன் இணைந்த நிறுவகமாக அனுராதபுரம் பல்கலைக்கழகக் கல்லூரி ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. தொழில்சார் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தால் அங்கீகரிக்கப்பட்ட தேசிய தொழில்சார் தகைமைகள் 5, 6 மற்றும் 7 ஆம் மட்டத்திலும் அதற்குச் சமமான மட்டத்திலுமான தொழில்நுட்பக் கற்கை நெறிகளைச் செயற்படுத்துவது பிரதான நோக்கங்களாக இருந்தன.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 அபிப்பிராயம்**

அனுராதபுரம் பல்கலைக்கழக கல்லூரியின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

மீளாய்வாண்டின் போது 4 சந்தர்ப்பங்களில் நடாத்தப்பட்ட முகாமைத்துவ சபைக் கூட்டத்திற்காக சமூகமளித்த அங்கத்தவர்களுக்குச் செலுத்தப்பட்ட ரூபா 48,000 படியினை உறுதிப்படுத்திக் கொள்வதற்கான வரவுப் பதிவேடு கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை<br>நிதிப்பிரமாணம் 756 | கல்லூரிக்குச் சொந்தமான பொருட் பதிவேட்டுப் பொருட்கள் மற்றும் களஞ்சியப் பொருட்கள் தொடர்பாக வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) திறைசேரிச் சுற்றறிக்கை | |
| (i) 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க சுற்றறிக்கை | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 103,880,263 கிரயமான நிலையான சொத்துக்கள் தொடர்பாக பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| | (ii) 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க சுற்றறிக்கை | மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 7,689,846 தொகையான கணனி உபபாகங்கள் மற்றும் மென்பொருள் தொடர்பாக நிலையான சொத்துப் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 2001 பெப்ரவரி 26 ஆந் திகதிய 393(1) ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கை | கூட்டங்களை நடாத்துவதற்காக ஹோட்டல் பயன்படுத்த முடியாதென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அதற்கு இணங்காத வகையில் மீளாய்வாண்டின் திசெம்பர் மாதத்தில் நடாத்தப்பட்ட முகாமைத்துவ சபைக் கூட்டம் அனுராதபுரத்தில் தனியார் ஹோட்டல் ஒன்றில் நடாத்தப்பட்டு அதற்காக ரூபா 20,000 மண்டபக் கட்டணமாகச் செலுத்தப்பட்டிருந்தது. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி விளைவு ரூபா 148,756 பற்றாக்குறையாக இருந்தது. ஊழியர் ஊதியம் மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறுமானத் தேய்வு என்பவற்றைச் சீராக்கியதன் பின்னர் நிறுவனத்தின் பங்களிப்பு ரூபா 27,643,516 மிகையாக இருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

(அ) 2014 இன் 01 ஆம் இலக்க தொழில்சார் தொழில்நுட்பப் பல்கலைக்கழக கல்லூரிச் சட்டவாக்கத்தின் பிரகாரம் தேசிய தொழில் தகைமைகள் 5, 6 மற்றும் 7 ஆம் மட்டங்களின் பாடநெறிகள் மற்றும் அதுவும் அதற்குச் சமமான மட்டங்களில் வேறு தொழில்நுட்பப் பாடநெறிகளை நடாத்துதல் கல்லூரியின் நோக்கங்களாகக் காண்பிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் பாடநெறி ஆரம்பிக்கப்பட்டு வருடமொன்று கடந்திருந்த போதிலும், இந்த நோக்கங்களை நிறைவேற்றக்கூடிய வகையில் பாடநெறிகள் ஒழுங்கமைக்கப்படாமையின் காரணமாக மீளாய்வாண்டில் கல்லூரியில் 07 பாடநெறிகளுக்காக சேர்க்கப்பட்ட 156 மாணவர்களில் 47 மாணவர்கள் பாடநெறிகளைக் கைவிட்டிருந்தனர். ஒவ்வொரு பாடநெறியையும் தனித்தனியாகக் கவனத்தில் கொள்ளும் போது பாடநெறியைக் கைவிட்டுச் செல்லும் சதவீதம் 8 சதவீதம் முதல் 50 சதவீதம் வரையிலான வீச்சில் காணப்பட்டது. எவ்வாறாயினும் இந்த வீதத்தைக் குறைப்பதற்கு அதற்கான காரணங்களைக் கண்டறிந்து தீர்வுகளை முன்வைப்பதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

கல்லூரி நடாத்திச் செல்லப்படுகின்ற காணியையும் கட்டிடத்தையும் கல்லூரியின் பெயரில் கையேற்பதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2002 மே 24 ஆந் திகதிய பீஎப்/பீஈ-21 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த நிதிக்கூற்றுக்கள் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும்,

பல்கலைக்கழகக் கல்லூரியின் 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 யூன் 06 ஆந் திகதியே கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

**5.2 செயல்நடவடிக்கைத் திட்டம்**

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 1/2014 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் 04 ஆம் பிரிவின் பிரகாரம் நீண்டகால தொலைநோக்குடன் அதிகாரச்சட்டத்தில் குறிப்பிடப்பட்ட நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு இலக்கிடப்பட்ட செயற்பாடுகளை உள்ளடக்கி வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்படவேண்டிய போதிலும் கல்லூரியினால் மீளாய்வாண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**5.3 உள்ளகக் கணக்காய்வு**

மீளாய்வாண்டில் செயற்பாட்டு நடவடிக்கைகளை ஆரம்பித்த அனுராதபுர பல்கலைக்கழக கல்லூரிக்காக பிரத்தியேக உள்ளகக் கணக்காய்வு பிரிவொன்று உருவாக்கப்படாதிருந்ததுடன் உள்ளகக் கணக்காய்வு பணிகளின் பொறுப்பு தொழில்சார் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவிற்கு கையளிக்கப்பட்டிருந்தது. அனுராதபுரம் கல்லூரிக்காக தனிப்பட்ட உள்ளகக் கணக்காய்வுத் திட்டம் தயாரிக்கப்படாதிருந்ததுடன் நோக்கங்களிற்குட்பட்ட செயற்பாடுகளில் செயலாற்றலை ஏற்படுத்துவதற்காக உள்ளகக் கணக்காய்வு அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**5.4 கணக்காய்வுக் குழு**

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 7.4.1 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவைத் ஸ்தாபித்து மீளாய்வாண்டில் கூட்டம் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

**5.5 பாதீட்டுக் கட்டுப்பாடு**

2008 இன் 31 ஆம் இலக்க தொழில்சார் தொழில்நுட்பப் பல்கலைக்கழக அதிகாரச்சட்டத்தின் 5(உ) பிரிவு மற்றும் 2014 இன் 01 ஆம் இலக்க தொழில்சார் தொழில்நுட்ப பல்கலைக்கழக கல்லூரிச் சட்டவாக்கத்தின் 16(2)(ஈ) மற்றும் (உ) பந்திகளின் பிரகாரம் வருடாந்த பாதீட்டுடன் வியாபாரத் திட்டமும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது கல்லூரியின் பணிப்பாளரது கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| **முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள்** | **அவதானிப்புக்கள்** |
| --- | --- |
| (அ) கணக்கீடு | கணக்குப் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை நாளதுவரையாக்கி பேணுவதற்கு நடவடிக்கை எடுக்காமை. |
| (ஆ) சொத்துக்களின் முகாமைத்துவம் | சொத்துக்களை கணக்கு வைத்தல் மற்றும் பதிவேடுகளைப் பேணாமை மற்றும் பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளாமை |
| (இ) செயற்பாட்டுக் கட்டுப்பாடு | பாடநெறிகளுக்கு உள்வாங்கப்படுகின்ற மாணவர்களை தொடர்ச்சியாக வைத்திருப்பதற்கு திட்டமொன்று அமுல்படுத்தப்படாமை. |